பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 4 (17—6—68) திங்கள் ★ வெளியூர்: ஆனி 5 (18—6—68) செவ்வாய் [இதழ்: 2

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

"சோஷலிசத்தை அடைய வேண்டுமானால் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகுந்த அளவில் பரவலாக்கப்படவேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டும்.

"தற்போது அதிகாரிகளிடையே ஒருசாரார் பாராளுமன்ற முறைக்கே எதிராகச் செயல்பட்டுவருகின்றனர். இந்த நிலையும் மாறவேண்டும்."

--வி. கே. கிருஷ்ண மேனன்
(திருவரங்கத்தில்)

பணக்காரர்களிடமிருந்து நாடு விடுபட வேண்டும்

அற்பப் புளுகுக்கும் ஓர் அளவுண்டே!

★ "சென்னை, கோவை ஆகிய இரண்டு நகரங்களில் மட்டும் தான் இப்போது ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறார்கள்; அதுவும், அவர்கள் ஆதரவாளர்கள் சாப்பிடுகிற புழுங்கல் அரிசி மட்டுமே போடுகிறார்கள்!"

—'போல்ஸ்டார்' ஆங்கில இதழில் கே. எம். சுப்பிரமணியம்

★ "படி அரிசி என்ற பேரில் கெட்டுப்போன—நாற்றம் பிடித்த அரிசி போடுகிறார்கள். சென்னை நகர மக்கள் கெட்டுப்போன அரிசியைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்."

—மீ. பக்தவத்சலம் (முன்னாள் முதலமைச்சர்) 'நவமணி': 15—6—68

இரண்டு வாதங்களையும் படித்துக் கொண்டீர்களா? இரண்டு பேரும் சென்னையில் இருப்பவர்கள்; இருவரும் அடிக்கடிச் சந்திப்பவர்கள்; அவர்கள், பொதுமககளின் முன் வைத்த இந்த இரண்டு வாதங்களையும் கூர்ந்து நோக்கிப் பாடம் பெறுங்கள்.

1. புழுங்கல் அரிசி சாப்பிடுகிறவர்கள் மட்டுமே திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளர்கள்! பச்சரிசி சாப்பிடுவோர் தி. மு. க.-வை ஆதரிப்பதில்லை! (அது, அவர் 'ஆராய்ச்சி முடிவு'! வெளியிடுவது அவருடைய உரிமை!)

2. ஆக, தி. மு. க.-வினருக்கு மட்டுமே சென்னையில்—கோவையில் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறார்கள்!

3. 'படி அரிசி' என்ற பேரில் கெட்டுப்போன நாற்றம் பிடித்த அரிசி போடுகிறார்கள். அதைத் தி. மு. க,-வினருக்குத்தான் போடுகிறார்கள்!

4. சென்னை நகர மக்கள், கெட்டுப்போன அரிசி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்—அதாவது, சென்னை நகர மக்கள் அனைவரும், புழுங்கல் அரிசி சாப்பிடுகிறவர்கள்—அதாவது, தி. மு. க. ஆதரவாளர்கள்! அட பாவிகளே! இதற்குப் போய் வயிறு எரிவானேன்!

அடடா! இதென்ன! எதையோ கிளறி—என்னவோ கண்ட மாதிரி போய்க்கொண்டே இருக்கிறதே!

ஏதோ, 'பேச்சில் பொருள் இருக்கும்—பொருத்தம் இருக்கும் என்று பார்ததால், இப்படியா?

அற்பத்தனமாகப் புளுகுவதற்குக்கூட ஓர் அளவு உண்டே! இந்தக் காங்கிரசுக்காரர்கள் அதையும் மீறி 'ரெகார்ட்' ஏற்படுத்துகிறார்கள்!

வறுமை இருக்கும் வரை சோஷலிசம் வராது!

புரட்சி மூலமே சோஷலிசப் புத்தொளி பெற முடியும்

காங்கிரசுக்காரர்களிடை வி. கே. கிருஷ்ணமேனன் விளக்கம்

திருச்சி, சூன் 17

"வறுமையை ஒழிக்காமல் சோஷலிசத்தைக் கொண்டு வரமுடியாது. நாடு முன்னேற வறுமை இடையூறு விளைவிக்கும். வறுமை வளர்வதால் தொழில் உற்பத்தித் திறன் கல்வியறிவு முதலிய எல்லாமே குறைந்து விடுகின்றன!

"ஜமீன்தார்களையும் இராஜாக்களையும் ஒழித்தோம்; ஆனால், அவர்களைவிட சக்திவாய்ந்த பணக்காரர்கள் இனறு நம்மை நசுக்குகிறார்கள்; இந்த நிலை ஒழிய வேண்டும்.

"எல்லா அரசியல் கட்சிகளுக்கும் சனநாயகத்தைக் காப்பாற்றும் எண்ணம் தோன்றும்வரை இந்தநிலை நீடிக்கும்.

என்று, முன்னாள் இந்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சரான, திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கருத்தெறிவித்தார்.

திருவரங்கத்தில் நடந்த காங்கிரசு மாணவர்கள் சோஷலிசப் பயிற்சி முகாமின் கடைசி நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:—

"நாம் இப்போது சோஷலிச நாட்டில் இல்லை என்பது உண்மை; ஆனால், முதலாளித்துவத்தை எதிர்க்கும் நாட்டில் இருக்கிறோம்!

"சோஷலிசம் என்பது ஒளி மிகுந்த வாழ்வுக்குத் தெரிகிற ஒரு வழி; அந்த வழியைப் புரட்சி செய்யாமல் பின்பற்ற முடியாது.

"தொழி[illegible]யெல்லாம் நாட்டுடைமையாக்குவது தான் சோஷலிசம் என்பதும் தவறு; தத்துவ அடிப்படையில் வேறுபாடு எதுவுமே இல்லாத மனித சமுதாயம் அமைவதே சோஷலிசம் என்பதுதான் சரியாகும். எல்லாத் துறையிலும் எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது.

"சோஷலிசத்தைப் பற்றி அமைச்சர்கள்கூடப் பலவிதமாகக் கருத்தறிவிக்கின்றனர். ஏன் சோஷலிசம் வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்."

ரூ. 7,516 கோடி

இந்திய அரசின் கடன் ஒப்பந்தங்கள்!

புதுடில்லி, சூன் 17—

1957-ம் ஆண்டு இறுதிவரையில் ரூ. 7,516 57-கோடிக்கு இந்திய அரசு கடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறது.

இதில் ரூ 6,270.54-கோடி மதிப்புக்கு இயந்திரச் சாதனங்களுக்கும், மற்ற பொருள்களுக்கும் அந்தத் தேதிவரையில் 'ஆர்டர்' கொடுத்திருக்கிறது.

இந்தியாவுக்குக் கடனுதவி செய்துள்ள 19-நாடுகளில் முன்னணியில் இருப்பவை அமெரிக்காவும் இரஷ்யாவுமாகும்; அமெரிக்கா ரூ. 2,438.96-கோடியும், இரஷ்யா ரூ. 1,021.13-கோடியும் கொடுத்திருக்கின்றன.

இதைத் தவிர, பி. எல். 480-பி. எல். 665 உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்கா ரூ. 31,01-கோடி வேறு கடனுதவியாகத் தந்திருக்கிறது.

இதர நாடுகள் அளித்துள்ள முக்கியக் கடனுதவிகள் வருமாறு:—

மேற்கு ஜெர்மனி: ரூ. 793 85 கோடி.

பிரான்சு: ரூ. 123.75-கோடி.
ஜப்பான்: ரூ 346.09-கோடி.
பிரிட்டன்: ரூ. 612.00-கோடி.
கனடா: ரூ 152.32-கோடி.
இத்தாலி: ரூ. 153.01-கோடி.

அனைத்து நாட்டு மறுவாழ்வு--மேம்பாட்டு பாங்கி ரூ. 767 93 கோடியும், அனைத்து நாட்டு வளர்ச்சி சங்கம் ரூ. 666.86-கோடியும் அளித்துள்ளன.

மொத்தக் கடனுதவியான ரூ. 7,516 57-கோடி தவிர, குவாயத் ரூ. 53 84-கோடியும், பாகரீன் ரூ. 12 36-கோடியும் கொடுத்துள்ளன.

தி. மு. கழகத் தேர்தல்கள் நடைபெறும் நாட்கள்

15—6—68 அன்று நடைபெற்ற கழகத் தலைமைக் குழுவினர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கேற்ப, இதுவரை நடைபெற்று முடிந்துள்ள கழக அமைப்புகளுக்கான தேர்தல்கள் போக இனி நடைபெறவேண்டிய கீழ்க்காணும் அமைப்புகளின் தேர்தல்கள், கீழ்க்காணும் நாட்களில் நடைபெற வேண்டுமென உறுதி செய்யப்படுகின்றன:—

1. வார்டு கிளைகள் அமைந்துள்ள பெரு நகரங்கள்—

சூலை 14 -- ஞாயிறு

2. வட்டக் கழகங்கள்—ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட பெருநகரக் கிளைகள்—

சூலை 28 -- ஞாயிறு

3. மாவட்டக் கழகங்கள்—மாநில அமைப்புகள்—

ஆகஸ்டு 11 -- ஞாயிறு

"சென்னை மாவட்டத்தின் வட்டக் (டிவிஷன்) கிளைகள் பகுதிக் கழகங்கள், மாவட்டக் கழகம் ஆகியவைகளின் தேர்தல் நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று அமைப்புச் செயலாளர் திரு. **என். வி. நடராசன்** எம்.எல்.சி. அவர்கள் அறிவிக்கிறார்.

கடத்தி வ[illegible]பட்ட சீனத்துப் பொருள்கள்-- இந்தியாவுக்குள் தாராள விற்பனை!

உ. பி. மாநிலம் பெஸ்தி மாவட்டத்தில் சீனாவிலிருந்து கடத்தப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ள பொருள்கள் மிகத் தாராளமாக மலிவு விலைக்கு விற்கப்படுகின்றனவாம்.

ஒரு சீன டிரான்சிஸ்டரின் விலை ரூ. 100-லிருந்து ரூ 150க்குள் தான் இருக்கிறது — அதே நேரத்தில் அதே போன்ற இந்திய டிரான்சிஸ்டரின் விலை ரூ. 300 முதல் 350 வரை இருக்கிறது.

ரூ. 4 50-க்கு விற்கப்படக்கூடிய மலிவு விலைப் பற்பசை ரூ 1.50க்குக் கிடைக்கிறதாம். இந்த மாவட்டத்தில் இந்தியக் கைக்கடிகாரங்களை யாரும் வாங்குவதில்லை. சீனக் கைக் கெடிகாரங்கள் ரூ. 50-முதல் 60-வரை விலையில் கிடைக்கின்றன.

ரூ 100-முதல் 150-வரை மதிப்புள்ள கல் பதித்த மோதிரம் ரூ. 80-க்குக் கிடைக்கின்றது.

நேபாளம் வழியாக பெஸ்தியில் உள்ள நௌகார் டெசில் வழியாக சீனப் பொருள்கள் கடத்தி வரப்படுகின்றனவாம்.

ஏமாற்றமடைந்தவர்கள் எதனையும் வெறுப்பர்!

பாராட்டுதலுக்குரிய ஒன்றினைக் குறைகூறுவது இயற்கை

'அனைவருடைய எண்ணமும் ஒரேமாதிரி இருக்க இயலாது'--அண்ணா தெளிவுரை

சென்னை, ஜூன் 17—

"உலகத்தின் பாராட்டுதலுக்குரிய ஒன்றை இங்கே சிலர் குறை கூறலாம்; அப்படிக் குறைகூறுவது, அவர்களுடைய சிந்தனைப் போக்கைப் பொறுத்தது! ஒருவருக்குப் பிடிப்பது மற்றொருவருக்குப் பிடிக்காதது இயற்கை---எல்லோருடைய எண்ணமும் ஒரேமாதிரியாக இருக்க முடியாது!

"சிலர் என்னை வெறுக்கலாம்; ஆனால், உலக நியதியை உணர்ந்துள்ள காரணத்தால் நான் அவர்களை வெறுக்கவில்லை--மாறாக, அவர்களை நேசிக்கவே செய்கிறேன்!

"வானவில்லைப் பார்க்கிறோம்; அதன் வண்ண அழகைக் கண்டு மயங்குகிறோம்---வியந்து நிற்கிறோம்; அதே நேரத்தில், விரக்தியடைந்து வழியில் செல்பவன், 'என்ன பார்க்கிறாய்?' என்று கேட்டால், 'அந்த வானவில்லைப் பார்--எவ்வளவு அழகாய் இருக்கிறது' என்று கூறினால், விரக்தியடைந்துள்ள--ஏமாற்றமடைந்துள்ள அவன், 'மகாப் பெரிய வானவில்---என்ன அழகு அதில் இருக்கிறது' என்றுதான் கூறுவான்!

"விரக்தியடைந்தவர்கள்---ஏமாற்றமடைந்தவர்கள், அழகையும் கலையையும் வெறுப்பது நியாயந்தான்; அதை உணர்ந்து நாம், நற்பணியாற்றுவதிலேயே நமது கவனத்தைச் செலுத்த வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தென்னிந்தியப் பிலிம் வர்த்தகச் சங்கத்தின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்.

புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள திரையரங்கத்தைப்பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.

படம் காட்டும் இயந்திரத்தை (புரொஜக்டர்) செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் இயக்கி வைத்தார்.

விழாத் துவக்கத்தில், தென்னிந்தியப் பிலிம் வர்த்தகத் தலைவர் சுந்தர்லால் நகாதா வரவேற்றார்.

தீ விபத்துத் துயர் துடைப்பு நிதிக்காகத் திரு. ஏ. எல். சீனிவாசன் ரூ. 1,000; சுந்தர்லால் நகாதா ரூ. 5,000; லால்தாஸ் கோவிந்ததாஸ் நிறுவனத்தினர் ரூ. 1,000 அளித்தனர்.

நிலைமை மாறிவிட்டது!

விழாவுக்குத் தலைமை தாங்கிய முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில், திரைப்படத் துறையின் மூலம் மக்களை நல்வழிப்படுத்தும் வாய்ப்புகள் பற்றியும், கூடுதல் வரியை உடனடியாக நீக்க முடியாத தன் நிலைமையையும் விளக்கிக் கூறிவிட்டு, மேலும் குறிப்பிட்டதாவது :—

"பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குமுன் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள், கதை—இசை-தயாரிப்பு ஆகிய எல்லாத் துறைகளிலும் வடநாட்டவரையே பின்பற்றி வந்ததாகக் கூறப்பட்டு வந்தது; ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது; இன்றோ, தமிழகத்தில் தயாரிக்கப்படும் படங்களை எல்லாத் துறைகளிலும் பின்பற்றி வடநாட்டுத் தயாரிப்பாளர்கள் எடுப்பதையும், தமிழ்நாட்டின் படங்களுக்கு வெளி மாநிலங்களில் அதிக மதிப்புக் கிடைத்து வருவதையும் பார்க்கிறோம்.

அனுவசியமான செலவுகள் ஏன் ஏற்படுகின்றன?

நமது திரைப்படத் தயாரிப்பாளர்கள் திறமையுடன் செயல்பட்டால், அவர்களால் அரசுக்கு இன்னமும் அதிக வருமானம் தேடித்தர முடியும்.

சிறந்த முறையில் திட்டமிட்டு படங்களைத் தயாரித்தால், தயாரிப்புச் செலவில் மூன்றில் ஒரு பங்கு தொகை மிச்சமாகும். சரியானபடி திட்டமிட்டுச் செயல்படாதகாரணத்தால்தான், அனுவசியமான செலவுகள் ஏற்படுகின்றன!

தமிழக அரசு தயார்!

"திரைப் படத் தயாரிப்பாளர்களுக்குப் பண உதவி செய்ய முதலீட்டு நிறுவனம் ஒன்றை ஒவ்வொரு மாநில அரசும் ஏற்படுத்த வேண்டும்" என்ற மத்திய அமைச்சரின் யோசனை ஆராயக்கூடிய ஒன்றாகும். இதுபோன்ற நிதி நிறுவனம் ஒன்றை உருவாக்க மத்திய அரசு—அதனுடைய வசதிக்கேற்ப நிதியுதவி செய்தால், மாநில அரசும் தன்னுடைய பங்கைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது.

படத் தயாரிப்பாளர்களே--ஒரு வேண்டுகோள்

நான் இந்த நேரத்தில், திரைப் படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்; குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் குறித்தும், தென்னகத்திலுள்ள உல்லாசப் பயண இடங்கள் குறித்தும் படங்களைத் தயாரித்துத் தருவதற்கு அவர்கள் முன்வர வேண்டும்; அதற்கான உதவிகளைச் செய்துதர அரசு தயாராக இருக்கிறது.

இதுபோன்ற படங்களைத் தயாரித்து வெளியிட்டால், அந்தப் படங்களுக்குக் கேளிக்கை வரியை ரத்து செய்யவும் தமிழக அரசு தயாராக இருக்கிறது. இதுபோன்ற நல்ல திட்டங்களின் நன்மைகளைப் பொது மக்கள் நன்கு அறிந்துகொள்ள இந்தப் படங்கள் மூலம் உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

பொறியியல் கல்லூரிக்கு மாணவர் தேர்வு

ஜூன் 26-ல் பேட்டி துவக்கம்

திருச்சி, ஜூன் 16—

பொறியியல் கல்லூரிகளில் சேர மனுச் செய்திருக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பேட்டி, ஜூன் 26-ஆம் நாள் துவங்கும்.

முதலில் சென்னையில் நடைபெறும்; பிறகு தேர்வுக் குழு, திருச்சி, மதுரை, கோவை ஆகிய இடங்களுக்குச் செல்லும்; அந்த இடங்களில் பேட்டிக்கான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை, தொழில் நுணுக்கக் கல்வி இயக்குநர் திரு. டி முத்தையன் தெரிவித்தார்.

இந்தத் தேர்வுக் குழுவில் தொழில் நுணுக்கக் கல்வி இயக்குநர்—திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியின் முதல்வர்—அரசினர் பொறியியல் கல்லூரி ஒன்றின் முதல்வர்—தனியார் பொறியியல் கல்லூரி ஒன்றின் முதல்வர் ஆகியோர் இருப்பார்கள்.

பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான விண்ணப்பப் பாரங்கள் வழங்குவது ஏற்கனவே துவங்கிவிட்டது.

சின்ன விஷயம்

முட்டாள்களுக்காக விதை விதைக்க வேண்டாம்!

பூமி தழலாய்க் கொதித்தாலும், நாம் அதன்மீது தானே நடக்க வேண்டியிருக்கிறது! அதுபோல், எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரசு, அர்த்தமற்ற அவசர வாதங்களைக் கக்கிக் கொண்டிருந்தாலும், நாம் பொறுத்துக் கொண்டுதான் போகவேண்டி இருக்கிறது! அதற்காகப் பொங்கி எழுவதில் புண்ணியம் என்ன? சிறிய ஆணிகளுக்குப் பெரிய சம்மட்டி எதற்கு?

காலாகாலமாகத் தமிழகத்தில் அமைச்சராக இருந்தவர் -- அறிஞர் அண்ணாவுக்கு முன்னாலேவரை முதலமைச்சராக இருந்தவர் -- திருவாளர் மீஞ்சூர் பக்தவத்சலம்! அவர் இரண்டு நாட்களுக்கு முன்னால் சென்னையில் பேசி இருக்கிறார் :—

"அமைச்சர் மதியழகன் எதிரிலே தீப்பிடித்து எரிந்திருக்கிறது; அதனால், 'அவர் தான், கையில் தீப்பெட்டி எடுத்துச் சென்றார்' என்று சொல்லலாமா?"

என்ற பொருளில் பேசியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

அமைச்சரவையிலிருந்து அனுபவம்பெற்ற ஒரு பெரியவர் பேசுகிற பேச்சா இது? அற்பத்தனமாக அல்லவா இருக்கிறது? வயிற்றெரிச்சலுக்கும் ஓர் அளவு இருக்கவேண்டும்.

"அமைச்சர் உடனே செய்தி தந்ததால், பல நூறு குடிசைகள் தீப்பிடிக்காமல் தப்பின" என்றல்லவா நாளிதழ்கள் செய்தி வெளியிட்டன!

இந்தச் செய்தியையும், பக்தவத்சலனார் பேச்சையும் இணைத்துப் பார்க்கும் பொதுமக்கள், இவரைப் பற்றி என்ன நினைப்பார்கள்?

இவர் மட்டும் என்று இல்லை; தாம் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரான நாளிலிருந்து தமிழகத்து அரசியலை நாற அடித்துக்கொண்டிருக்கிறாரே சி. சுப்பிரமணியம் -- அவரும் இப்படித் தான் பேசிவருகிறார்!

வண்டியிலே பூட்டி கண்ணுக்குப் பட்டை கட்டி விட்ட குதிரை எந்தப் பக்கமும் திரும்பியே பார்க்காத மாதிரி, அவர் இஷ்டமாய்ப் போய்க் கொண்டிருப்பார்! எதிரியின் வாதங்களை அவர் ஏறெடுத்துப் பார்க்கமாட்டார்!

அவர் பிரச்சினைகள் என்றும் தீராதவை; அதிலும், கொஞ்ச நாட்களாக உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு என்று ஒரு கற்பனைக் கரடி வேறு விட்டுக்கொண்டிருக்கிறார்! எந்தக் காங்கிரசுக்காரர் அவர் காதில் என்னத்தை ஓதி வைத்தாரோ தெரியவில்லை -- அதை வைத்துக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கிறார்!

'சுப்பிரமணியம் சொல்லுகிறாரே--இதில் ஏதாவது விஷயம் இருக்கும்' என்று இப்போது காமராசரும் ஆரம்பித்து விட்டிருக்கிறார்!

போயும் போயும் இவர்களுக்குப் பிரச்சினைகள் கிடைக்கின்றன பார்த்தீர்களா?

தமிழக அரசுப் பேருந்துகளில் திருக்குறள் எழுதியிருக்கிறதல்லவா? அதில் முதலடியில் நாற்சீரும், இரண்டாம் அடியில் முச்சீரும் முறையாக எழுதிவிட்டுப் பக்கத்தில் மூன்று நான்கு புள்ளிகள் வைத்திருக்கிறதாம்.

இது ஒரு பிரச்சினை! இதை ஒருவர் கடிதம் எழுதி அறிவிக்க--ஒரு கருத்தரங்கு போலவே ஆக்கிவிட்டிருக்கிறது ஒரு பொழுதுபோக்குப் பத்திரிகை!

இராசதந்திரத்திலேகூடப் பலவகை உண்டு. அதற்குக்கூட இவர்கள், அறிஞர் அண்ணா அவர்களிடம்தான் பாடம் பெறவேண்டும்!

அவிழ்க்கக்கூடியதைத் தமிழ்நாடு காங்கிரசார் அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்! கையால் தட்டிவிட்டுப் போகவேண்டிய ஒன்றுக்குக் கத்தியை உருவிக்கொண்டிருக்கிறார்கள்!

ஆடி மாதம் பிறந்த நரி ஆவணி மாத வெள்ளத்தைப் பார்த்துவிட்டு, 'என் வாழ்நாளில் இவ்வளவு வெள்ளத்தை நான் கண்டதே இல்லை' என்று சொன்னதாம்!

அந்த மாதிரி, இந்தத் திடீர்க் காங்கிரசுக்காரர்களின் தேச பக்தி கொழுந்து விட்டெரிகையில், தமிழகம் மட்டும் குட்டிச்சுவராகத் தெரிகிறதாம்! அடக் கடவுளே! இப்படியும் சில மனிதர்களா?

'முட்டாள்களுக்காக விதை விதைக்க வேண்டியதே இல்லை; அவர்கள் தாமாகவே முளைப்பார்கள்' என்று ஒரு யூதப் பழமொழி உண்டு.

இன்றையத் தமிழ்நாடு காங்கிரசுக்காரர்களைப் பார்க்கிறபோது, அதுதான் நினைவுக்கு வருகிறது!

- பூரணன்

ஊழல் குற்றம்

அரசு அதிகாரிகளுக்கு

அளிக்கப்பட்ட 'தண்டனை'

புதுடில்லி, ஜூன் 14—

மத்திய புலன் விசாரணை நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் போலீசுப் பிரிவு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், இலாகா மட்டத்தில் தண்டனை அளிக்குமாறு 154 வழக்குகளை சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பிவைத்தது.

தவறான நடத்தை, இலஞ்ச ஊழல், குற்றம் ஆகியவற்றுக்காக இந்த விசாரணை நடத்தப்பட்டது.

இந்த வழக்குகளில் 21 கெசட் பதிவு அதிகாரிகளும், 194 இதர அரசு ஊழியர்களும் சம்பந்தப்பட்டிருந்தனர்.

பரிசீலனை ம[illegible] 76 வழக்குகளில் ஆறு கெசட் பதிவு அதிகாரிகளும், 87 இதர அரசு ஊழியர்களும் இலாகா மட்டத்தில் தண்டிக்கப்பட்டனர்.

துயர் துடைப்பு நிதி

சென்னை நகர மக்களுக்கு மேயர் வேண்டுகோள்

சென்னை, ஜூன் 16—

சென்னையில் ஏற்பட்ட கோரத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களின் துயர் தணிக்கத் தாராளமாக நிதி உதவி செய்யும்படி கொடையுள்ளம்படைத்த பொதுமக்கள் அனைவரையும் மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் கேட்டுக்கொண்டுள்ளார்; அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

"அண்மையில் வியாசர்பாடியிலும், சுற்றுப்புறத்திலும் ஏற்பட்ட கடுமையான தீ விபத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான குடிசைவாழ் மக்கள், வீடு இழந்து—உடைமைகளை இழந்து தவிக்கிறார்கள். அவர்களுக்கு மாநகராட்சி, முடிந்த அளவுக்குத் தற்காலிக உதவிகளைச் செய்து வருகிறது; இது போதாது. அவர்களுக்கு உடனடியாக மாற்று வசதி செய்து குடியமர்த்தவேண்டும்.

'மேயர் தீ விபத்து நிதி'யிலிருந்த பணமெல்லாம் தீர்ந்துவிட்டது. ஆகவே கொடையுள்ளம்படைத்த பொதுமக்கள் தாராளமாக நன்கொடை வழங்க முன்வரவேண்டும்."

மலை ரயில் பாதைகளை எடுக்கக்கூடாது

மத்திய பாதுகாப்பு அமைச்சர் கருத்து

"நாட்டில் எந்த மலை இரயில் பாதையையுமே எடுப்பது எனக்குப் பிடிக்காததாகும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் சர்தார் சுவரண் சிங் தெரிவித்தார்.

"மலைவாச இடங்களுக்கு இரயில் வசதி இருப்பது, உல்லாசப் பயணிகள் வருவதற்குத் தூண்டுதலாக உள்ளது; அவை இலாபகரமாக இல்லை என்றால்கூட, அவற்றை நீடித்து வைத்திருக்கவேண்டும்"

என்றும் அமைச்சர் சுவரண் சிங் தெரிவித்தார்.

மாநகராட்சிக்கு அரசு மானியம்

குடி நீர்--சாக்கடைத் திட்டங்கட்கு ரூ. 24 லட்சம்

சென்னை, ஜூன் 15—

இவ்வாண்டு சனவரி மாதம் தொடங்கி 29-2—68-வரை சென்னை மாநகராட்சி நிறைவேற்றியுள்ள குடிநீர்--சாக்கடைத் திட்ட வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ 24,44 705 தர அனுமதி வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இத்தொகையில் குடிதண்ணீர் மேம்பாட்டுப் பணிகளுக்காக

(3-ம் பக்கம் பார்க்க)

தாயகத்தை மறந்துபோன தமிழர்களின் விழிப்புணர்ச்சி

தமிழ்நாட்டுடன் பண்பாட்டுத் தொடர்பு கொள்ள ஆர்வம்

மொரீஷியஸ் வரவேற்பு பற்றி அமைச்சர் சத்தியவாணிமுத்து

சென்னை, மே 15—

அமைச்சர் சத்தியவாணிமுத்து அம்மையார் தமது மொரீஷியஸ் தீவுச் சுற்றுப்பயணம்பற்றி செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் 'பயணம் மிகவும் வெற்றிகரமாக முடிந்தது' என்ருர்.

மொரீஷியஸ் நாட்டுத் தலைமையமைச்சரும், கவர்னர்—ஜெனரலும் சிறப்பான முறையில் தம்மை வரவேற்று உபசரித்ததாகக் கூறினர்.

அந்நாட்டின் நகராட்சிகளின் சார்பிலும் சிறப்பான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டதாகக குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

" இந்தியாவிலிருந்து வரும் முதல் தமிழகத்துப் பிரதிநிதி—என்ற முறையில், அங்குள்ள தமிழர்கள் என்னை மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்றனர்.

இந்தச் சந்திப்பின் மூலம் ஏற்பட்ட தொடர்பு நீடித்து நிலைத்திருக்கவேண்டுமென்று அந்நாட்டினர் பெரிதும் விரும்புகின்றனர்.

'பண்பாட்டு — கலைத் தொடர்பு நீடித்திருக்கும்வண்ணம் இரு நாட்டு உறவும் பலப்பட வேண்டும்' என்றும் அந்நாட்டினர் விருப்புகின்றனர்.

அந்நாட்டின் முக்கியப் பிரமுகர்களுக்கு நான் தமிழகத்திலிருந்து கொண்டு சென்ற திருக்குறள்—தொல்காப்பியம், — சிலப்பதிகாரம் ஆகிய இலக்கிய இலக்கண நூல்களையும் பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுததோவியங்களையும் , அண்ணா அவர்களின் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேருரை நூலையும், தோழர் ஏ. பி. சனர்த்தனம் அவர்கள் எழுதிய அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றையும் பரிசாக அளித்தேன்.

அங்குள்ள பள்ளிகளுக்குத் தமிழ் ஆசிரியர்களை அனுப்பி உதவுமாறும், பொறியியற் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் படிக்க மாணவர்கட்கு உதவித் தொகை அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் அந்நாட்டினர் கேட்டுக்கொண்டனர்."

கரிவலம்வந்தநல்லூரில் கழகப் பொதுக்கூட்டம்

கரிவலம்வந்தநல்லூரில் தி.மு.க. சார்பில் 30—5—68-ல் தோழர் சி. சுந்தராசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சமுகச் சாதனைகளை விளக்கி சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் பி துரைராசு பேசினர்.

தோழர்கள் கா. மாரியப்பன், திருவேங்கடம், செல்வம் ஆகியோரும் பேசினர்.

அடுத்து தோழியர் தமிழரசி பி.ஏ., காங்கிரசாரின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும், சமுக அரசின் சாதனைகளையும் விளக்கி உரையாற்றினர்.

கரிவலம்வந்தநல்லூர் கிராமக் கர்ணத்தின்மீது சட்ட ரீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமெனத் தமிழக அரசினரைக் கேட்டுக்கொள்ளும் வகையில் வட்டப் பிரதிநிதி சி. பா சுப்பையா கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

தோழர் இராமசாமி நன்றி நவின்ருர்.

அன்று மாலை 6-மணிக்கு தி. மு. கழகச் செயலாளர் வெ. இராமசாமி தலைமையில் எம். ஜி ஆர் மன்றப் புதுக் கட்டடத்தைத் தோழியர் தமிழரசி பி ஏ. திறந்து வைத்தார்.

கங்கைகொண்டான்காலனியில் கழகப் பொதுக்கூட்டம்

கங்கைகொண்டான் காலனி தி. மு. க. சார்பில் 9—6—68-ல் நெய்வேலி-2 கலைஞர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் ந. இராசரத்தினம், மு வள்ளியப்பன், எஸ்.எஸ் நேசன், இரா. கரிகாலன், சண்முகம், சி. டி. ஜெரி ஆகியோர் பேசியபின், தோழியர் அறந்தை ஏ. பி மனோன்மணி, அண்ணாவின் ஆட்சியின மாட்சி குறித்தும காங்கிரசுகாரர்களின் தரம் குறைந்த செயல்களைக் கண்டித்தும் நீண்டதோர் உரையாற்றினர்.

சென்னை 96-வது வட்டத்தில் கருணநிதி பிறந்த நாள் விழா

சென்னை 96-வது வட்டம் புது அசோகா நகர் கலைஞர் பொதுப் பணி மன்றத்தின்சார்பில், அமைச்சர் கருணநிதி அவர்களின் 45-வது பிறந்த நாளை முன்னிட்டு 3—6—68 காலை 9 மணியளவில் மன்றச் செயலாளர் மு முருகேசன் தலைமையில் புதூர் டி. ஆர். செயராமன் கொடியேற்றி வைத்தார்; அமைச்சர் கருணநிதி படத்தை எம். குமார் அவர்கள் திறந்து வைத்தார்; சைதை சம்பந்தர் எம.சி. குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினர். எம். கோபால் எம்.எல் ஏ, எம். இந்திரா, கோ அய்யாவு, எம். இலட்சுமய்யா, ஆர். பி. வீரப்பன், மற்றும் பலர் பேசினர்.

மணவாளநகர் வள்ளுவர் மன்றம்

திருவள்ளூர் வட்டம் மணவாள நகர் வள்ளுவர் மன்ற அமைப்புக் கூட்டம் பொ. நடராசன் தலைமையில் 2—6—68-ல் நடைபெற்ற போது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : ஈ. முருகேசன் ; செயலாளர் : எம் இராசகோபால்; துணைச் செயலாளர் : கே. சுந்தரராசன்; பொருளாளர் : சி. லோகநாதன்; ஐந்து பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 10-வதுவட்ட முத்தமிழ் முன்னேற்ற மன்றம்

சென்னை 10-வது வட்டத்தில் முத்தமிழ் முன்னேற்ற மன்ற அமைப்புக் கூட்டம், 8—6—68-ல், ப. வடிவழகன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

அவைத் தலைவர் : இல. இராமதாசு ; செயலாளர் : பூ. செல்வம் ; துணைச் செயலாளர் : வெ. ஏழுமலை ; பொருளாளர் : இரா. லிங்கம் ; காப்பாளர் ; பா. துரை ; ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்.

சென்னை ரப்பர் தொழிலாளருக்குப் போனசு

சென்னை ரப்பர் தொழிற்சாலை நிர்வாகத்திற்கும்—ஊழியர் சங்கத்திற்கும் 11—6—68-ல ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 1966—67-ம் ஆண்டிற்கான போனசாக ஒவ்வொரு தொழிலாளியின் ஊதியத்திலும் 16 சதவிகிதம் வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தால் சுமார் 2,000 தொழிலாளாகள் ரூ. 9 இலட்சம் போனசாகப் பெறுவர்.

காஞ்சியில் திருவள்ளுவர் விழா

காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு—கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் ஆதரவில் 10—6—68-ல் திருவள்ளுவர் விழா கொண்டாடப்பெற்றது. காஞ்சித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. நா. கிருட்டினன் எம்.ஏ பி.எல் தலைமை தாங்கினர்.

சங்க இயக்குநர் எஸ். திருவேங்கடம் எம்.சி. அனைவரையும் வரவேற்ருர்.

" திருவள்ளுவர் பெயரால் இயங்கும் கூட்டுறவுச் சங்கம் ஆண்டுதோறும் திருவள்ளுவர் விழா வினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடுதல் சாலச் சிறந்தது " என்று தலைவர் நா. கிருட்டினன் கூறினர்.

காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கோ. இராமச்சந்திரன் எம் ஏ., வள்ளுவரின் சிறப்புப் பற்றியும், திருச்குறளின் மேன்மைபற்றியும் கேட்டார் வியக்கும் தகையலாய் விரிவுரையாற்றினர்.

நூலின் தரம் அறிந்த நெசவாளப் பெருங்குடி மக்களிடையே மற்ருெரு நூலாம் திருக்குறளின் மேன்மை குறித்து விளக்கமாக முப்பாலிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி இனிக்க இனிக்கத் தமிழ் மணம் கமிழ வைத்தார்கள்.

சங்கத் தலைவர் இரா. வெங்கடேசன் நன்றி நவின்ருர்.

டெண்டர் அறிக்கை

பொதுப் பணித்துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளை மேற்கொண்டு கட்டி முடிக்க 27—6—68 மாலை 5-30 வரை முத்திரையிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான டெண்டர் பாரங்களையும் வரை படங்களையும் ஆலை அலுவலகத்தில் பிரதி வேலைக்கும் ரூ. 5 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் தேவையான விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

வ. எண்	வேலை விவரம்	டேவணித் தொகை	முடிக்கும் காலம்
1.	விருந்தினர் விடுதி கட்டும் வேலை	ரூ. 2,500	3 மாதங்கள்
2.	கடைநிலை ஊழியர்கள் தங்கும் வீடுகள் கட்டும் வேலை	ரூ. 1,375	2 மாதங்கள்

டென்டர்கள் 28—6—68 அன்று பிரிக்கப்படும். ஒவ்வொரு டெண்டரும் மேற்குறிப்பிட்ட டேவணித் தொகையுடன் அனுப்பப்பட வேண்டும்.

கே. பி. சீனிவாசன்,
பொது நிர்வாகி (பொறுப்பிருப்பு),
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு அஞ்சல், தென் ஆற்காடு மாவட்டம்.

தமிழ்நாடு எடை அளவு பழுது பார்ப்போர் சங்கம்

தமிழ்நாடு எடை அளவு பழுது பார்ப்போர் சங்க நிர்வாகிகள் தேர்தல் 19—5—68 அன்று நடைபெற்றபோது, தோழர் இராமதாசு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ; மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விவரம் :—

துணைத் தலைவர் : ஜி. ஆர். பாலசுந்தரம் ; செயலாளர் : எஸ். லூர்துசாமி ; துணைச் செயலாளர் : எம். வி இராமன் ; பொருளாளர் : ஜி பி. நாராயணசாமி ; செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. ஜைனுலுதீன், ஷாஜகான், ஆர். ஏ. அஜீஸ், ஆர். டி. சாமி, பி கோபால், எஸ் செல்வராசு.

கொள்கைக் குழப்பம்!

எங்கே - - - யாருக்கு ?

★ "பெருந்தலைவர் ஜவாகர்லால் வகுத்துத் தோகுத்து எதிர்கால சந்ததிக்கென விட்டுச் சென்ற சனநாயக சோஷலிசக் கொள்கைக்கு எதிர்முழக்கமாகத் தி. மு. க. பேச்சாளர்கள், 'விஞ்ஞான சோஷலிசம்' பற்றி உளறிக்கோண்டிருக்கிருர்கள் "

—கு. மா. பாலசுப்பிரமணியம் என்ற பெயருள்ள ஒரு காங்கிரசுக்காரர்—'போல்ஸ்டார்' ஆங்கிலக் கிழமை இதழில்.

★ "இப்போது நமக்கு சனநாயகம் என்ருல் என்ன என்பது தெரியும். ஆனுல், 'சோஷலிசம்' என்ருல் என்ன என்பதைத் தெரிந்துகொள்வதே சிரமமாய் உள்ளது !

" 'சோஷலிசம்' என்பதற்கு ஒட்டு மோத்தமான கருத்து நம்மிடையே (இனியாவது) உருவாக வேண்டும் !

" 'சோஷலிசம்' என்ருல் என்ன என்பதைக் காங்கிரசு ஊழியர்களும், என் போன்றவர்களும் தெரிந்துகோள்வதற்கு உதவும் வகையில் திட்டவட்டமாக ஏதாவது விளக்கம் தந்தாக வேண்டும்."

—ஆந்திர முதல்வர் பிரம்மானந்த ரெட்டி — தமிழ்நசடு காங்கிரசுக் கமிட்டி ஊழியர் கூட்டத்தில்.

முதலில் இருப்பது, வெண்புரு விட்டுக்கொண்டே குறுக்கு வழியில் அரசியல் செய்ய முயலும் ஒரு அவசரக் காங்கிரசுக்காரரின் பேச்சு !

பின்னாலே இருப்பது, காங்கிரசில் ஊறி வளர்ந்து கொள்கையின் நெளிவு சுளிவுகளைக் கண்ட ஒரு பெரியவரின் உள்ளுணர்வு !

முந்தியவர், கொள்கையைக் 'கரைத்துக் குடித்த' மாதிரி பேசுகிருர் ! பிந்தியவரோ, 'கொள்கையே இன்னமும் புரியவில்லை' என்கிருர் !

முந்தியவர் -- அதிதீவிர புத்திசாலியன்று ; பிந்தியவர் -- அடக்கத்தின் விளைவாக அப்படிப் பேசவில்லை !

கொள்கையை விளக்காமல் -- தலைவர்களுக்கே கூடத் தெளிவாக்காமல் -- ஒரு கட்சி இருந்துவருகிறது ! அதன் பெயர்தான் காங்கிரசு !

இந்த அழகில், வயிற்றெரிச்சல் காங்கிரசுக்காரரான பகதவத்சலம், 'தி.மு.க.-வுக்குக் கொள்கை ஏது ? எல்லாம் குழப்பந்தான்' என்று பேசிவருகிருர் !

ஒரு நிமிடம், வாய்விட்டுச் சிரிக்கத்தான் தோன்றுகிறது !

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,

மூங்கில்துரைப்பட்டு & அஞ்சல்,
(வழி) சங்கராபுரம்,
தெ. ஆ. மாவட்டம்

விற்பனைக்கு

1963 மாடல் அம்பாசடர் கார்
1961 மாடல் வில்லிஸ் ஜீப்
டி. வி. எஸ். பாடியுடன்

27—6—68 அன்று மாலை 3 மணிக்கு மேலே கண்டுள்ள இரண்டு வாகனங்களையும் ஆலை அலுவலகத்தில் ஏலத்திற்கு விடப்படும். வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்கள் அலுவலக நேரத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 5-30 மணிக்குள்ளாக ஆலைக்கு வந்து வாகனங்களைப் பார்வையிடலாம்.

ஏலம் கோர விரும்புவோர் ஒவ்வொரு வாகனத்திற்கும் ரூ. 500 முன்பணமாகக் கட்டவேண்டும். இந்த முன்பணம் அதிக பட்சம் ஏலம் கோரியவர் தவிர மற்றவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். மற்ற விதிமுறைகளுக்கு விண்ணப்பித்து எழுதலாம்.

கே. பி. சீனிவாசன்
பொது நிர்வாகி (பொறுப்பிறுப்பு)

'நம் நாடு' அலுவலகத் தோழர் திருமணம்

அமைச்சர் முத்துசாமி வாழ்த்தினர்

சென்னை, ஜுன் 15—

'நம் நாடு' அலுவலகத்தில் பணியாற்றிவரும் தோழர் ஏ. ஜே. இராபர்ட்டுக்கும்—தோழியர் இந்திராணிக்கும் நடைபெற்ற திருமணத்தையொட்டி, 12—6—68. மாலை வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

புலவர் கி. தியாகராசன் தலைமை வகித்து, மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் வந்து கலந்துகொண்டு, மக்களுக்கு வாழ்த்துரை வழங்கி மாலையணிவித்தார்.

மற்றும் 'நம் நாடு' பொறுப்பாசிரியர் திரு. காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்களும், தோழர் மா. செங்குட்டுவன் அவர்களும் 'நம் நாடு' அலுவலகச் சார்பில் வாழ்த்திப் பேசினர்.

மணமக்களுக்கு, 'நம் நாடு'—'அறிவக'த் தோழர்கள் சார்பில் மாலையணிவித்துப் பரிசுப் பொருளும் வழங்கப்பட்டது. மற்றும் பலரிடமிருந்து வாழ்த்துக்களும் அன்பளிப்புக்களும் வந்திருந்தன.

சென்னை 3-வது வட்ட தி. மு. க. செயலாளர் கே. சாரங்கபாணி, துவக்கத்தில் அனைவரையும் வரவேற்ருர் ; இறுதியில் நன்றி கூறினர்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 1,37,212 ஆகும்.

பூண்டியிலிருந்து தாம்பரபாக்கம் வரையில் கால்வாய் வெட்டிய பணியும், கழிவு நீரை வெளியேற்ற இரும்புக் குழாய்களை வாங்க அரசின் முன்னேட்ட மானியமான ரூ. 5,88,693-ல் மேற்படி மொத்தத் தொகையில் அடங்கும்.

இந்தியாவுக்குத் தேசிய இலக்கியம் எது?

உலகத்துக்கே பொதுமறையான திருக்குறளை ஏற்காதது ஏன்?

அமைச்சர் மா. முத்துசாமி குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 17—

"திருவள்ளுவர் தமது கருத்துக்களை, மொழிக்குள—சமயத்துக்குள நாட்டுக்குள—குறிப்பிட்ட சமுகத்தினரை மட்டும் கட்டுப்படுத்துவதாக அமைக்காமல், உலக மக்கள அனைவருக்குமாக உருவாக்கியிருக்கிறர்!

"'இந்தியா ஒரே நாடு' காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்று; என்று பேசுகிறேம்! இந்தியாவுக்கென்று ஒரு தேசியக் கீதம் இருக்கிறது; தேசியப் புறவையும் தேர்ந்தெடுத்திருக்கிறேம்; ஆனுல், 'தேசிய இலக்கியம்' என்று ஒன்று இருக்கிறதா? இருந்தால், இப்போதிருக்கிற எல்லைப் போராட்டம், மொழிப் போராட்டம் நடக்குமா?

"நாடு சுதந்திரமடைந்த அன்றே இந்தியத் தேசிய இலக்கியமாகத் திருக்குறளைத் தேர்ந்தெடுத்திருந்தால், துப்பாக்கிக் குண்டுகளால் காணமுடியாத ஒற்றுமையைக் கண்டிருக்க முடியும்!

"வள்ளுவனை தன்னை உலகினுக்கே தந்தது தமிழ் நாடு; உலகப் பொதுமறை திருக்குறள்; அதை இந்தியத் தேசிய இலக்கியமாக்கவேண்டும்' என்று அன்றே தென்னட்டுத் தலைவர்கள வற்புறுத்தத் தவறினர்!"

இவ்வாறு உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், திருவள்ளுவர் திருநாளையொட்டி நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் குற்றஞ்சாட்டினர்.

சென்னை—இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றச் சார்பில் திருவள்ளுவர் திருநாள் நேற்று காலை பாலர் அரங்கில் நடைபெற்றது.

காலை 10-30 மணியளவில், விழாவினையொட்டி கவியரங்கம் நடைபெற்றது; பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி அவர்கள் தலைமை தாங்கினர். கவிதையிலேயே அவர் தலைமை உரையாற்றினர்.

திரு. இராம. வீரப்பன் வரவேற்புரையாற்றினர்; பின்னர் கவியரங்கம் துவங்கிற்று.

கவிஞர் கருணனந்தம், 'பண்பு' என்ற தலைப்பிலும்; புலவர் பொன்னிவளவன் 'அடக்கம்' என்ற தலைப்பிலும்; கவிஞர் முத்தலிங்கம் 'நாண்' என்ற தலைப்பிலும்; கவிஞர் அப்துர் ரகுமான் 'ஆள்வினை' என்ற தலைப்பிலும்; கவிஞர் தமிழ்ப்பித்தன் 'ஒழுக்கம்' என்ற தலைப்பிலும்; கவிஞர் முருகுசுந்தரம் 'அன்பு' என்ற தலைப்பிலும்; கவிஞர் பூங்குன்றன் 'ஊக்கம்' என்ற தலைப்பிலும்; புலவர் புதுமைப்பித்தன் 'பொறை' என்ற தலைப்பிலும் கவிதைகளை அரங்கேற்றினர்.

கவிஞர்களைப் பாராட்டி திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ அவர்களும், திரு. டி. கே. சண்முகம் எம்.எல்.சி. அவர்களும் பேசினர்.

இறுதியில், 'முத்தாரம்' தினகரன் நன்றி நவின்றர்.

மாலை 6-30 மணியளவில் கருத்தரங்கம் நடைபெற்றது.

திரு. மு. இரா. பெருமாள் அவர்கள் தலைமை தாங்கினர்.

டி. செங்கல்வராயன்

'குறள் கூறும் சட்டம்' என்ற தலைப்பில், திரு. டி. செங்கல்வராயன் பேசினர்.

ஆ. க. அ. அப்துஸ் சமது

மாநிலங்களவை உறுப்பினர் ஆ. க. அ. அப்துஸ் சமது அவர்கள் பேசுகையில், 'திருவள்ளுவரின் கருத்துக்கள், இன்ன மதத்தினருக்கு என்றில்லாமல், மனித சமுதாயத்திற்கே ஏற்புடைய கருத்துக்களாக இருக்கின்றன' எனக் குறிப்பிட்டார்.

ஏ. பி. சனர்த்தனம்

திரு. ஏ. பி. சனர்த்தனம் எம்.எல்.சி. அவர்கள், 'திருக்குறளில் புரட்சி' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திருக்குறளில் திருவள்ளுவர் தமது புரட்சிக் கருத்துக்களையெல்லாம் நிரம்பப் புகுத்தியிருக்கிறர்!

அந்தக் காலத்திலிருந்து ஆதிக்கக்காரர்கள்' வள்ளுவரின் கருத்துக்களை நஞ்செனக் கருதினர்கள். அவரது கருத்துக்களை மறைத்தார்கள்!

இரண்டாயிரம் ஆண்டுகள் தூங்கியிருந்த தமிழர்கள், இப்போது தான் விழிப்புணர்ச்சி பெற்று வருகிறர்கள்!

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வள்ளுவர் அந்த நாளில் சொன்னதே பெரும் புரட்சியாகும்!

"சாயமே இது பொய்படா" என்றும், 'நீர் மேல் குமிழி இந்த வாழ்க்கை' என்றும், 'மாயை' என்றும், 'அநித்தியம்' என்றும் பேசிவந்த காலத்தில் 'எல்லாம் அவன் செயல்' என்று பேசிவந்த காலத்தில்—'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றர்; இது, வள்ளுவர் செய்த புரட்சியாகும்!

"எல்லாம் மாயை' என்ற காலத்தில், 'குழல் இனிது யாழினிது என்பர்—தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்றர்!

பெண்ணை அடிமையாக்கி வைத்த காலத்தில், 'பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்ற கருத்தும், 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழு தொழுவாள் பெய் யெனப் பெய்யும் மழை' என்றர்.

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மகன் சிறுகை அளாவிய கூழ்' என்று சொல்லி, 'இது தாண்டா அமுதம்' வேறில்லை: என்று புரட்சி செய்தவர் வள்ளுவர்!"

அமைச்சர் மா.முத்துசாமி

அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திருவள்ளுவர், காலத்தை வென்ற கவிஞராவார்! உலகத்திற்குத் தேவையான எல்லாக் கருத்துக்களையும் திருக்குறளில் எடுத்துக் கூறியிருக்கிறர்! மதம், நாடு என்ற எல்லைக்குள் அடங்காத உலகத்திற்கே பொதுவானவர் திருவள்ளுவர்!

வள்ளுவர் மீதிருக்கும் அன்பினுலும், பற்றுலும், அவரை ஒரு சமயத்தைச் சேர்ந்தவர் என்றுக் குவது சமதர்மத்திற்கே இழுக்காகும்!

சாதி—மதம்—மொழி—நாடு—என்ற கட்டுக்கு உட்படாத வகையில், வள்ளுவத்தை உலகத்திற்குப் பொதுவானதாக ஆக்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

வள்ளுவரும், வள்ளுவமும் எல்லோருடைய உள்ளத்திலும் இடம்பெற வேண்டும்; அது தான் வள்ளுவருக்கு நாம் செய்யும் நன்றியாகும்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்பதற்கேற்ப'வள்ளுவனை உலகினுக்கே தந்துவிட்டு நாம் வள்ளுவரையும், வள்ளுவத்தின் பெருமையையும் அறியாமலிருக்கிறேம்!

திருக்குறளைப் புலவர்களும், ஆசிரியர்களும், அரசியல்வாதிகளும் மட்டும் பேசிக்கொண்டிருக்கும் நிலை மாறி, பாமர மக்களும் பேசத்தக்க நிலை உருவாக வேண்டும்.

இஸ்லாமியர்கள் குரானை அறிந்திருப்பதுபோல்—கிருத்துவர்கள் விவிலியத்தை அறிந்திருப்பது போல்—உலகப் பொதுமறையாம் திருக்குறளை, தமிழர்கள் கற்றுத் தெளிந்திருக்க வேண்டும் என்ற சூளுரையை, இந்தத் திருவள்ளுவர் திருநாளில் நாம் எடுத்துக் கொண்டாக வேண்டும்."

உறுப்பினர்கள் முகவரி மாற்றம்

கழகச் சட்டதிட்டம் விதி 6—பிரிவு 3-ன்படி, ஒரு கிளையிலிருந்து மற்றெரு கிளைக்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்பும் கழக உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட கிளையின் செயலாளர் ஒப்புதலோடு தலைமைக் கழகத்தில் மாற்றிக்கொள்ளலாம் என்பது பொதுவாக நடைமுறையில் உள்ளதாகும்.

அதற்கேற்ப, விரிவாக்கப்படும் அடிப்படையில் மட்டுமே சென்னை மாநகரின் 120 வட்டங்களின் (டிவிஷன்களின்) கிளைகள் அமையவேண்டியிருப்பதால், சென்னை மாநகரத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் தமது முகவரியை மாற்றிக்கொள்ள விரும்பும் தோழர்களுக்கு, முறைப்படித் தலைமைக் கழகம் அனுமதியளித்தது.

ஜூன் 3, 4 ஆகிய நாட்களில் சென்னை மாவட்டக் கிளைகளின் தேர்தல்கள் நடைபெறுவதாக இருந்தநேரத்தில், மே 25-ஆம் நாளோடு முகவரி மாற்றத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து அதற்கேற்ப அறிவிக்கப்பட்டது.

சென்னை அமைப்புக்களின் தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளதால், முகவரி மாற்றம் செய்துகொள்ள விரும்பும் தோழர்கள், சம்பந்தப்பட்ட கிளைச் செயலாளர் அனுமதியுடனும், மாவட்டச் செயலாளரின் சிபாரிசுடனும் 25-6-68 ஆம் நாள் மாலை 7-மணிவரை தலைமைக் கழகத்தில் தமது விண்ணப்பத்தைச் சேர்ப்பித்து முகவரியை மாற்றிக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

'அறிவகம்' சென்னை-13 17—6—68 } —தலைமைக் கழகம் (தி.மு.க.)

குழுக் கூட்டம்

'அரக்கோணம் வட்ட திமுக குழுக் கூட்டம், 19—6—68 பிற்பகல் 2 மணிக்கு காவேரிப்பாக்கம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்' என்று வட்டச் செயலாளர் ஜி எல்லப்பன் அறிவிக்கிறர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

18-6-68

பேட்டவாய்த்தலை

தி. மு. க. சார்பில் மாலை 7-மணியளவில்; தலைவர்: பெ. குட்டத்துரை; பேசுவோர்: எஸ். ஏ. ஜி. ராபி, புலவர் மு. அருணு, அ. நடராசன். (சிவகங்கை சேதுராசனின் பல குரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

அனகாபுத்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர்: பி. வி. தசரதன்; பேசுவோர்: க. அறிவழகன் எம்.எல்.சி., இளம்பரிதி, துரைமுருகன், சி. இராமலிங்கம், மற்றும் பலர்.

சென்னை 90-வது வட்டம்

கலைவாணர் நினைவு மன்றத் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு அடையாறு எல். பி. ரோடில்; தலைவர்: என். கிருஷ்ணன்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, இரா தர்மலிங்கம், எம். குமார், டி. கே. கபாலி எம்.சி., எஸ். வி. வேலு, டி. தம்பிதுரை எம்.சி., வே. தமிழ்மணி எம்.சி., அ. ச. சங்கரன்.

காஞ்சிபுரம்

தேவராசனர் நினைவு மன்றச் சார்பில் வெளிநாடு சென்று திரும்பிய திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களுக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு இரங்கசாமி குளம் அருகில்; தலைவர்: டி. மாணிக்கம்; பேசுவோர்: சி. வி. எம். அண்ணமலை எம்.எல்.ஏ, கே. எம். இராசகோபால் எம். எல்.ஏ., என். கிருட்டிணன் எம். எல்.ஏ., கே டி. எஸ். மணி எம்.சி வெ. சம்பந்தன்.

கலை நிகழ்ச்சி

வேலாயுதபாளையம் தி. மு. க. சார்பில் 19—6—68 மாலை 6-மணியளவுக்கு மலைவீதி கலைவாணர் திடலில், தோழர் என். முனியப்பன் தலைமையில் மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கொடுந் துயர் நெடுந் துயராகிறது!

குடிசைவாழ் மக்களிடையே பீதி--பரபரப்பு

தீக்கொடுமை விரிந்து பரவியது-சிறுர்கள் பலி-குடியிருப்பின்றி மக்கள் அல்லல் -- உதவி கோரித் தலைமையமைச்சருக்கு மக்களவை உறுப்பினர் கி. மனேகரன் முறையீடு

சென்னை, ஜூன் 17—

குடிசைகள் தீப்பற்றி எரியும் கொடுமை கடந்த புதன்கிழமையிலிருந்து சென்னையில் தொடர்ந்து நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

இப்படி, தீ விபத்துக்கள் நாள்தோறும் தொடர்ந்து கொண்டிருப்பதால், குடிசைவாழ் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் ஏராளமான பொருட் சேதத்துடன் மூன்று உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த ஐந்து நாட்களாக நகரில் மொத்தம் 15,000 குடிசைகள் வரை எரிந்து சாம்பலாகி இருக்கின்றன!

தீவிபத்துக்கான காரணம் துலங்கவில்லை. காவல்துறையினரும் தீவிரமாகப் புலன் விசாரணை செய்துவருவதுடன் குடிசைப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்து வருகின்றனர். சந்தேகத்துக் கிடமளிக்கும் வகையில் திரியும் நபர்களைக் கண்காணித்தும் வருகின்றனர்.

சனிக்கிழமை நள்ளிரவிலிருந்து ஞாயிறு மாலை 4-மணி வரை 15 இடங்களிலிருந்து தீயணைக்கும் படையினருக்கு அவசர அழைப்பு வந்ததாம்.

சனிக்கிழமையன்று 10 இடங்களிலும், ஞாயிற்றுக்கிழமை 15 இடங்களிலும் தீப்பற்றி எரிந்திருக்கிறது.

வனரோஜா என்று 10 வயது சிறுமி தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கு இறந்துவிட்டது; மேலும் ஆறுமுகம் என்ற 4 வயது சிறுவன தீயில் சிக்கி, இராயப்பேட்டை மருத்துவமனையில் மாண்டான்; மற்றும் சாந்தி என்னும் குழந்தையும் தீ விபத்தில் மாண்டது.

தீ விபத்தினுல் 7-பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிருர்கள்.

தலைமையமைச்சருக்குத் தந்தி

சென்னைத் தீ விபத்துக்களினுல் பாதிக்கப்பட்டு வீடுவாசல் இழந்து தவிக்கும் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கட்கு உடனடி உதவியளிக்கத் தலைமையமைச்சர் நிதியிலிருந்து பணவுதவி அளிக்குமாறு தலைமையமைச்சர் திருமதி இந்திராகாந்திக்கு, வட சென்னைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கி. மனேகரன் தந்தி அனுப்பியிருக்கிறர்.

மாநகராட்சியும் — உறுப்பினர்களும், சீரணியினரும், கழகத் தொண்டர்களும் ஆக்கவேலைகளில் ஈடுபட்டு அரும் பணியாற்றிவருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.